[1978 செப்டம்பர் 12]

கூட்டுறவுச் சங்கக் கணக்குகள் தணிக்கை.

* வின எண் 154—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவாப்பரேடிவ் சொசைட்டிகளை ஆடிட் செய்வதற்காக தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தணிக்கைக் கட்டணம்.

* வின எண் 155.—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஆண்டு தணிக்கை கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல்?

(இ) அதனல் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) 1963-64-ம் ஆண்டு முதல் விவசாயக் கடன் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 1976-77-ம் ஆண்டிற்கு மட்டும் ரூ. 11.13 இலட்சமாக இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். பல்வேறு சங்கங்கள் நல்லமுறையில் மிக லாபகரமாக ஓடுகின்றன. சில சங்கங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன. ஆகவே, லாபத்தில் இயங்குகின்ற சங்கங்களிடமிருந்து வசூலித்து நஷ்டத்தில் ஓடுகின்ற சங்கங்களுக்கு மானியம் அளிக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலிருக்கிற 4,594 விவசாய நாணய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முழுவதுமாகவும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ அந்தத் தொகை தான், 11.13 லட்சமாக வந்திருக்கிறது. எல்லாச் சங்கங்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ப. சந்திரன் : விவசாயக் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி இருக்கக்கூடாது என்று அரசு அறிவித்திருக்கிறது. அப்படி அறிவித்திருக்கிற நிலையில் அப்படி கெடுபிடி செய்து வசூலிக்க எக்ஸிக்யூஷன் ஆபீசர் என்ற அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள், இப்போது இந்த அறிவிப்பின் காரணமாக வேலையில்லாமல் இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்படி ஒரு அரசாங்கப் பதவி தேவைதானா, அதனால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவு எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஆண்டு தணிக்கைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா என்பதாகும். ஆகவே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்கள் நிச்சயமாக அளிக்கப்படும்.

திரு. வி.கே. கோதண்டராமன் : கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதே போல் கூட்டுறவுத் தொழிலாளர் கடன் சங்கங்களுக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா? இல்லை என்று சொன்னால் கூட்டுறவுத் தொழிலாளர் கடன் சங்கங்களுக்கும் தள்ளுபடி செய்ய உத்தேசமுண்டா?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வகையான சங்கங்களுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு பொருந்தாது. ஒன்று, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும், இன்னென்று கூட்டுறவு நூற்பு ஆலைக்கும். மற்ற ஏழு வகையான சங்கங்களுக்கு இந்த விதிவிலக்கு பொருந்தும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தொழிலாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில் இந்தச்சங்கங்கள் தொடங்கப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளுக்கு இந்த விலக்கு உண்டு.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1963–64-ம் ஆண்டிலிருந்து கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1976–77-ல் 11·13 லட்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானல் 1963–64-லிருந்து இதுவரை ஆண்டு தோறும் எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: இதற்குத் தனியாகக் கேள்வி போடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானலில் அமுதம் அங்காடி.

* வின எண் 156— திரு. கே. பண்ணை சேதுராம்—மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் சிவில் சப்ளை கார்ப்பரேசன் மூலம் அமுதம் ஸ்டோர்ஸ் நிறுவக் கோரி மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) கொடைக்கானலில், கூட்டுறவு சிறப்பங்காடிகள், பண்டகசாலைகள் இயங்கி வருவதால், மேலும் ஒரு 'அமுதம்' பண்டகசாலை அவசியம் தானு என்பதை நுகர்பொருள் வாணிபக் கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தாலூகாவில் மினி சூப்பர் மார்க்கெட் கூட இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இங்கு